2006 மே 26]

மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்பதும், இவ்வரசின் குறிக்கோளாக இருந்து வருவதை செயல்படுத்திடும் வகையில், அரிசிக்கான குடும்ப அட்டை பெற்றுள்ள அனைத்துக் குடும்பத்தினருக்கும் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2/– என்ற விலையில் தரமான அரிசி பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ஜூன் மாதம் 3 ஆம் தேதி முதல் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

17. புதிதாகக் குடும்ப அட்டை பெற்றுள்ளவர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்க மத்திய அரசிடமிருந்து கூடுதல் ஒதுக்கீடு பெற்றிட இவ்வரசு ஆவன செய்யும்.

18. தமிழர்களின் நீண்டகாலக் கனவை நனவாக்கும் வண்ணம், திருமதி சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலுடன், மாண்புமிகு மன்மோகன் சிங் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கடந்த ஆண்டில் மத்திய அமைச்சர் மாண்புமிகு அர்ஜூன் சிங் அவர்களின் ஆக்கப்பூர்வ ஆதரவுடன் தமிழ் மொழியைச் செம்மொழியாக அங்கீகரித்துப் பெருமைப்படுத்தியுள்ளது. தொல்காப்பியர், திருவள்ளுவர் பெயர்களால் செம்மொழி விருதுகள் வழங்கப்படுவதற்கான இவ்வரசின் கோரிக்கை வலியுறுத்தப்படும். மேலும் தமிழ் மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக அறிவிக்க வேண்டுமென்ற நீண்டகாலக் கோரிக்கையை இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும். குமரிமுனையிலுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை அருகில் சென்று காண்பதற்கான படகுப் போக்குவரத்து நவீனப்படுத்தப்படும். மேலும் திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்குமாறு மத்திய அரசை தொடர்ந்து இவ்வரசு வலியுறுத்தும். தமிழர்களுடைய பண்பாட்டுச் சின்னமான கண்ணகியின் சிலை மீண்டும் அதே இடத்தில் கடற்கரை சாலையில் வரும் ஜூன் திங்கள் மூன்றாம் நாள் மாலையில் நிறுவப்படப் பணிகள் தொடங்கப்பெற்றுள்ளன.

19. பள்ளிகளில் பயிலும் மாணவ,மாணவியர் அனைவரும் வரும் கல்வி ஆண்டு முதல் கட்டாயமாக தமிழை ஒரு பாடமாகப் பயின்றிட எதிர்ப்படும் இடையூறுகளைக் களைந்து, விரைவில் கல்வியாளர்களைக் கலந்து பேசி ஆணை பிறப்பிக்க இவ்வரசு உறுதி அளிக்கிறது.

20. பெருந்தலைவர் காமராசர் பிறந்த ஜூலை 15–ஐ கல்வி வளர்ச்சி நாளாக பள்ளிகளில் விழா எடுத்துக் கொண்டாடுவதென்ற இவ்வரசின் ஆணையையொட்டி, அந்நாள் முதல் சத்துணவுடன் வாரம் இரண்டு முறை (திங்கள், புதன்கிழமைகளில்) முட்டை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.